# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2022 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க,*
## சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம்

---

*(2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2022, திசெம்பர் மாதம் 16 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 15.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## 2022 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம்

[2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.- ஓ. 16/2022

### 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**2.** (இச்சட்டத்தில் இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (v) ஆம் உட்பந்தியின் (v) ஆம் விடயத்தில், "என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (v) ஆம் உட்பந்தியின் (vi) ஆம் விடயத்தில், "2020, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2020, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஆனால் 2022, மே 31 ஆந் தேதியன்று அல்லது அதன் முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கும் எட்டு சதவீதப்படி (இதில் வரிப்பின்னம் 2/27 ஆகும்);" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (v) ஆம் உட்பந்தியின் (vi) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(vii) 2022, யுன் 1 ஆந் தேதியன்று தொடங்கி 2022, யுன் 30 ஆந் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதிக்காகவும் 2022, யுலை 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஆனால் 2022, ஓகத்து 31 ஆந் தேதியன்று முடிவடைகின்ற ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காகவும் பன்னிரெண்டு சதவீதப்படி (இதில் வரிப் பின்னம் 3/28 ஆகும்); அத்துடன்

(viii) 2022, செத்தெம்பர் 1 ஆந் தேதியன்று தொடங்கி 2022, செத்தெம்பர் 30 ஆந் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதிக் காகவும் 2022, ஒற்றோபர் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப் பகுதிக்காகவும் பதினைந்து சதவீதப்படி (இதில் வரிப்பின்னம் 3/23 ஆகும்).".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) பந்தி (vi) இல், "2020, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர்" என்னும் சொற்களுக்கும் எண்களுக் கும் பதிலாக, "2020, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர், ஆனால் 2022, செத்தெம்பர் 30 ஆந் தேதியன்று அல்லது அதற்குமுன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) பந்தி (vi) ஐ உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்து வதன் மூலமும்:-

"(vii) 2022, ஒற்றோபர் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் இலங்கையில் ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டைக்

கொண்டுநடாத்துகின்ற அல்லது நிறைவேற்றுகின்ற ஆள் ஒவ்வொருவரும்-

(அ) விடயத்துக்கேற்ப, ஒரு மாதத்தை அல்லது மூன்று மாதங்களைக் கொண்ட ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் முடிவில், விடயத்துக்கேற்ப, ஒரு மாதத்தை அல்லது மூன்று மாதங்களைக் கொண்ட அந்த வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதியில் இலங்கையில் செய்யப்பட்ட அத்தகைய ஆளின் பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் அல்லது சேவைகளினதும் வரிவிதிக்கப்படற்பாலனவான வழங்குகைகளின் மொத்தப்பெறுமதி இருபது மில்லியன் ரூபாவாக அல்லது அதற்கு மேலாகவிருப்பின்; அல்லது

(ஆ) அப்போது முடிவடைகின்ற பன்னிரெண்டுமாத காலப்பகுதியில், இலங்கையில் செய்யப்பட்ட அத்தகைய ஆளின் பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வரிவிதிக்கப்படற்பாலனவான வழங்குகைகளின் மொத்தப்பெறுமதி எண்பது மில்லியன் ரூபாவை விஞ்சியிருப்பின்; அல்லது

(இ) விடயத்துக்கேற்ப, அடுத்துவரும் ஒரு மாதத்தை அல்லது மூன்று மாதங்களைக் கொண்ட வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியில், இலங்கை

யில் செய்யப்பட்ட அத்தகைய ஆளின் பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வரிவிதிக்கப்படற்பாலன வான வழங்குகைகளின் மொத்தப் பெறுமதி இருபது மில்லியன் ரூபாவை விஞ்சக்கூடுமென அல்லது அடுத்துவரும் பன்னிரெண்டு மாத காலப்பகுதியில் எண்பது மில்லியன் ரூபாவை விஞ்சக்கூடுமென நம்புவதற்கு எந்நேரத்திலும் நியாயமான ஏதுக்கள் இருப்பின்,

இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.".

(3) ஓராம் உட்பிரிவுக்கான இரண்டாம் காப்புவாசகத்தில், "2016, மே 2 ஆம் தேதியிலிருந்து எழுகின்றதாதல் வேண்டும்.". என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"மே 2 ஆம் தேதியிலிருந்து எழுகின்றதாதல் வேண்டும்:

ஆயின், மேலும், (vii) ஆம் பந்தியின் நோக்கங்களுக்காக, பதிவுக்கான தேவைப்பாடு, இந்தத் (திருத்தச்) சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதியிலிருந்து எழுகின்றதாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்

**4**. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை, அதன் பாகம் II இல் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பாகத்தின் (ஆ) என்னும் பந்தியின் (xi) ஆம் விடயத்தின் (ஈ) என்னும் உபவிடயத்தில், "எவரேனுமாளினால், 2019, திசெம்பர் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் அத்தகைய வழங்குகை இடம்பெற்றி

ருப்பின்.''; என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''எவரேனுமாளினால், *2019*, திசெம்பர் *1* ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் *2022*, திசெம்பர் *31* ஆந் தேதியன்று அல்லது அதன்முன்னர் அத்தகைய வழங்குகை இடம்பெற்றிருப்பின்,''; அத்துடன்

(2) பந்தி (ஆ) வின் (xi) ஆம் விடயத்தின் (ஈ) என்னும் உப விடயத்தை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்:-

''(உ) வதிவிட வசதியின் ஏதேனும் குத்தகை அல்லது வாடகைதவிர அல்லது ஏதேனும் கூட்டாட்சியாதன வதிவிட வசதியின் வழங்குகைதவிர, எவரேனுமாளினால், *2023*, சனவரி *1* ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் அத்தகைய வழங்குகை இடம்பெற்றி ருப்பின்.''.

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*